Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.
**S.C.No. 07 of 2015**

| | | |
|---|---|---|
| Deposition of P.W. 10 (L.W. 9 ) | } Prosecution<br>} Defence<br>} | |
| Name of the Witness | : | திரு.ரவி |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 24.11.2025.

6ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கருங்கலூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கோடிஅள்ளி பஞ்சாயத்து தலைவராக இருந்தேன். தற்போது விவசாயம்

செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. காவல் நிலையத்திற்கு வரச்சொன்னார்கள், போன போது கையெழுத்து போட சொன்னதால் கையெழுத்து மட்டும் போட்டேன். வேறு எந்த விவரமும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து மட்டும் என்னுடையது. அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**குறிப்பு - அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற வேண்டும் என்று அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை போலிசார் விசாரித்தனர் என்றும் போலிஸ் விசாரணையில் நான் கருங்கல்லூரில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன் என்றும், நான் கோடுஅள்ளி பஞ்சாயத்து தலைவராக உள்ளேன் என்றும், நான் விவசாயம் செய்து வருகிறேன் என்றும், எனக்கு திருமணமாகி 2 பெண் குழந்தைகள் உள்ளனர் என்றும், 05.12.2013ம் தேதி பஞ்சாயத்து வேலை சம்பந்தமாக கருங்கல்லூரில் இருந்த போது பொம்மிடி போலிஸ் இன்ஸ்பெக்டர் பொம்மிடி காவல் நிலைய குற்ற எண்.408/13, 409/13, 410/13 வழக்கில் சம்மந்தப்பட்ட சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜருக்கு சாட்சியாக இருக்க என்னையும்,

என்னுடன் இருந்த வேப்பமரத்தூா் டேங்க் ஆபரேட்டா் முருகன் மருவரையும் கேட்டுக கொண்டு பார்வை மகஜா் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், அந்த பார்வை மகஜரில் நானும், மேற்படி முருகனும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என்றும், நேற்று 04.12.13ம் தேதி மாலை சுமார் 5.30மணியளவில் வேப்பமரத்தூடிரை சேர்ந்த கோபால் குடும்பத்தாரும் முன்னால் தலைவா் ரங்கநாதன் குடும்பத்தாருக்கும் ஏற்பட்ட தகராறு பற்றி நான் கேள்விப்பட்டேன் என்றும்,

2) மேற்படி ரங்கநாதன் நேற்று ஆர்.டி.ஓ மற்றும் டி.எஸ்.பி ஆகியோா் வேப்பமரத்தூருக்கு வந்ததாகவும், அவா் யசோதா கடை பக்கமாக போனபோது அங்கிருந்த பெண்களிடம் நீங்களும் அதிகாரிங்கிட்ட உங்க பிரச்சனையை சொல்லவேண்டியதுதானே என்று கேட்டுக் கொண்டிருந்த போது, மேற்படி கோபாலின் பெரிய மருமகள் ஏண்டா பொட்டையா நில்லுடாஎன்று சொல்லிக்கொண்டே பின்னால் வந்த ரங்கநாதனை கையால் அடித்ததாகவும், அப்போது அங்கு ஓடி வந்து அவரை தடுத்த போலீசாரையும் கூடவே வந்த கோபால் குடும்பத்தா் அடித்து கீழே அள்ளவிட்டு ரங்கநாதனை அடித்து விட்டதாகவும், அதை கேள்விபட்டு அங்கு வந்த ரங்கநாதன் மகன், மருமகன் மற்றும் கோபால் குடும்பத்தா் மாறி மாறி கற்களாலும்,

கட்டையாலும் அடித்துக் கொண்டதாகவும், இரு தரப்பிலும் ரத்தகாயம் ஏற்பட்டதாக கேள்விபட்டேன் என்றும், போலிஸ் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை .. இல்லை.

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional Distric Judge,
Dharmapuri.